1994 மார்ச் 17]

முற்பகல் 10·20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 6, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

மோகனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுதல்.

*22124—திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டதை மீண்டும் அரசு மருத்துவ மனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் நகரமானது, அங்கே சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பாலிடெக்னிக் கல்லூரியும் ஆற்று ஓரப் பகுதியில் இருப்பதால் ஜனத்தொகை மிகுந்து இருக்கின்றது. அங்கே அரசு மருத்துவமனையாக இருந்தது பிரைமரி ஹெல்த் சென்டராக மாற்றப்பட்டது. அதை மீண்டும் அரசு மருத்துவமனையாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. விபத்துகள் நடக்கின்ற கால கட்டத்தில் 25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நாமக் கல்லுக்கோ அல்லது வேலூருக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையிலே அமைக்க

வேண்டும்; அது ஒரு யூனிபார்மாக இருக்க வேண்டும் என்ற முறையிலேதான், எங்கெங்கே மருத்துவமனைகள் என்ற பெயரிலே இருந்ததோ, அவையெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று மாற்றப்பட்டு இருக்கின்றன. ஆனால் அங்கே அதற்கு முன்னால் என்ன பணிகள் எல்லாம் இருந்தனவோ, என்ன சேவைகள் எல்லாம் செய்யப்பட்டனவோ, அத்தனையும் செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவையும் அரசாங்கம் போட்டு இருக்கிறது. எனவே, விபத்துகள் நடந்தால், அந்த விபத்திலே அடிபடக்கூடியவர்களும் அல்லது பாதிக்கப்பட கூடியவர்களும் அந்த மருத்துவமனையிலே சிகிச்சை பெறவும், அதற்குப் பின்னாலே வேறு ஏதாவது ஒரு அசம்பாவிதமான சூழ்நிலை ஏற்பட்டு இறந்துவிட்டால் அங்கேயே போஸ்ட் மார்ட்டம் செய்வதற்கான அத்தனை நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்ற உத்திரவுதான் அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே, பெயர்தான் மாற்றப்பட்டு இருக்கிறதேயொழிய அங்கே நடக்கிற செயல்பாட்டிலே வேறு எந்த மாற்றமும் தேவை யில்லை என்றும் சொல்லி இருக்கிறோம். எனவே, அந்தக் குறை இருக்குமேயானால், அதை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு போதிய மருத்துவர்களும், செவிலியர்களும் மருந்து வசதியும் இல்லாத் காரணத்தால், மக்கள் யாரும் அதை நாடிச் செல்லாத நிலையில் அது இருக்கிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதல் மருத்துவரையும், செவிலியரையும் நியமிக்க உத்தரவிடுவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத் திலேயும் 2 மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்பது நியதி, சில இடங்களிலே மருந்தகமாக இருந்ததை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றி இருக்கிறோம். அங்கு ஒரே ஒரு மருத்துவர் இருந்து கொண்டு இருந்தார். அதையும் அதிகப்படுத்துவதற் கான நடவடிக்கையைப் படிப்படியாக எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, ஆரம்பச் சுகாதார நிலையமாக அது இருக்கிற காரணத்தால் அங்கு 2 மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஒருவேளை இல்லாமல் இருந்தால், அவர்களுடைய டர்ன் வருகிறபொழுது அதற்குக் கூடுதல் மருத்துவர்கள் நியமிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 7, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.